# NADAR HR.SEC.SCHOOL, RAJAPALAYAM.
## XII - COMPUTER SCIENCE – TAMIL MEDIUM
## FIRST MID ANSWER KEY 2024

| | | | |
|---|---|---|---|
| 1. | செயலுருபுகள் | 6. | pass |
| 2. | Pair | 7. | லாம்டா |
| 3. | Namespaces | 8. | 0.125 |
| 4. | Big O | 9. | 12 |
| 5. | கைடோவான்ரோஷம் | 10. | நிரல் |

**11. நிரலாக்க மொழியைப் பொறுத்து செயற்கூறுவை வரையறுக்கவும்.**

செயற்கூறு என்பது ஒரு பெரிய நிரலில் வரையறுக்கப்படும் ஒரு குறிமுறை அலகு ஆகும். செயற்கூறுகள், நிலையான வெளியீட்டை வழங்குவதற்கான மாறிகள், கோவைகள் போன்ற பலவகையான உள்ளீடுகளின் மீது செயல்படும் குறிமுறை தொகுதிகளை கொண்டிருக்கும்.

**12. Pair என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

- இரு மதிப்புகளை ஒன்றாக இணைக்கும் முறையை இணைகள் (pairs) என்று அழைக்கிறோம்.
- Pairs எனும் கலவை அமைப்பு, List அல்லது Tuples கொண்டு உருவாக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு:**

lst := [5, 10, 20]

**13. private மற்றும் protected அணுகியல்புகளை பைத்தான் எவ்வாறு குறிப்பிடுகிறது?**

private மற்றும் protected அணுகியல்புகளை பைத்தான் ஒரு மாறி அல்லது வழிமுறையின் பெயருக்கு முன்னே முறையே ஒற்றை அடிக்கோடிட்டும் மற்றும் இரட்டை அடிக்கோடிட்டும் குறிப்பிடப் பரிந்துரைக்கிறது.

**14. நினைவிருத்தல் என்றால் என்ன?**

நினைவிருத்தல் என்பது ஒரு உகந்த யுக்தி ஆகும். ஒரே மாதிரியான உள்ளீடு மீண்டும் கொடுக்கப்படும் போது, மிக உயர்ந்த செயற்கூறு அழைப்புக்களின் முடிவுகளை சேமித்து தற்கால சேமிப்பு முடிவுகளை திருப்பி அனுப்பி, கணினி நிரல்களை வேகப்படுத்துவதற்கு பயன்படுகிறது.

**15. பைத்தானில் குறிப்புரைகள் பற்றி குறிப்பு வரைக?**

பைத்தானில் குறிப்புரைகள் ஹாஸ் (#) குறியுடன் தொடங்கும். பைத்தான் மொழிபெயர்ப்பி இவற்றை குறிமுறையின் ஒரு பகுதியாக் கருதாது. குறிப்புரைகள் ஒரு வரி அல்லது பல வரியாக இருக்கலாம்.

**எடுத்துக்காட்டு:**

```
# Single Line comment
```

**16. கட்டுபாட்டு கட்டமைப்பு என்றால் என்ன?**

கட்டுப்பாடு நிரலின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு தாவுவதற்கு காரணமான நிரல் கூற்றுகள் கட்டுபாட்டு கட்டமைப்பு (அ) கட்டுப்பாட்டு கூற்றுகள் எனப்படும்.

**17. தொடரியல்:**

```
if <நிபந்தனை> :
        செயல்பாட்டுத் தொகுதி-1
else:
        செயல்பாட்டுத் தொகுதி-2
```

**எடுத்துக்காட்டு:**

```
a = int(input("Enter any number : "))
if a%2==0:
    print (a, " is an even number")
else:
    print (a, " is an odd number")
```

**18. கான்கிரிட் தரவுவகை மற்றும் அருவமாக்கம் தரவுவகை வேறுபடுத்துக.**

| கான்கிரிட் தரவுவகை | அருவமாக்கம் தரவுவகை |
|---|---|
| கான்கீரிட் தரவு வகை (CDT's) அல்லது ஸ்டக்சர்ஸ் எளிய கருத்தினை செயல்படுத்த உதவுகிறது. | அருவமாக்கம் தரவு வகை (ADT's) ஒரு கருத்து எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பதை தவிர்த்து, அக்கருத்து பற்றிய உயர் நிலை பார்வை (மற்றும் பயன்பாடு) வழங்குகிறது. |

**19. உள்ளமை வரையெல்லையை எடுத்துக்காட்டுடன் விவரி?**

- உள்ளமை வரையெல்லை, நடப்பு செயற்கூறில் வரையறுக்கப்பட்ட மாறிகளைக் குறிக்கும்.
- செயற்கூறு, எப்பொழுதும் மாறியின் பெயரை முதலில் அதன் உள்ளமை வரையெல்லையில் பார்வையிடும் அந்த வரையெல்லையில் இல்லையென்றால் மட்டுமே வெளி வரையெல்லையில் சோதிக்கும்.

**எடுத்துக்காட்டு:**

```
Disp( ):
    a := 7      →   உள்ளமை மாறி
    print a
Disp( )
```

**வெளியீடு:**

7

**20. நேரம் மற்றும் இடச் சிக்கல்களிம் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?**

நெறிமுறையின் செயல்திறன், நேரத்தையும், நினைவக இடத்தையும் எவ்வாறு அது திறமையாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதனைப் பொறுத்ததாகும்.

நெறிமுறையின் நேர செயல்திறனை அளவிடுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன.

- இயந்திரத்தின் வேகம்
- நிரல் பெயர்ப்பி மற்றும் பிற கணினி மென்பொருள் கருவிகள்
- இயக்க அமைப்பு
- நிரலாக்க மொழி
- தரவு தொகுதி

**21. மும்ம செயற்குறியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

- மும்ம செயற்குறி, நிபந்தனை செயற்குறி என்றும் அழைக்கப்படுகிறது.
- இது சமன்பாடுகளின் நிபந்தனையை சரி அல்லது தவறா என்று சோதித்து செயல்படுத்தும், மும்ம செயற்குறி பல வரி if..else கூற்று போல் அல்லாது நிபந்தனைகளை ஒற்றை வரியில் சோதிக்க அனுமதிக்கிறது.

**தொடரியல்:**

```
மாறி_பெயர் = [சரி] if [நிபந்தனை] else [தவறு]
```

**எடுத்துக்காட்டு:**

```
min = 50 if 49<50 else 70
```

**22. தொடரியல்:**

```
for counter_variable in sequence:
        statements-block 1
[else:
        statements-block 2]
```

**23. தற்சுழற்சி எவ்வாறு செயல்படுகிறது?**

1) தற்சுழற்சி செயற்கூறு வெளிப்புற குறிமுறையிலிருந்து அழைக்கப்படும்
2) அடிப்படை நிபந்தனை நிறைவேற்றப்பட்டால், நிரலானது சரியான வெளியீடு கொடுத்து வெளியேறும்.
3) இல்லையெனில், செயற்கூறானது தேவையான செயற்பாட்டை இயக்கும் மேலும் தற்சுழற்சி முறையில் தன்னைத்தானே அழைத்துக்கொள்ளும்.

**24. கொடுக்கப்பட்ட வருடம் லீப் வருடமா இல்லையா என்பதனைச் சோதிக்கும் பைத்தான் நிரலை எழுதுக.**

```
n=int(input("Enter a Year : "))
if n%4 == 0:
    print(n," is a Leap Year")
else:
    print(n," is not a Leap Year")
```

**25. இடைமுகம் மற்றும் செயல்படுத்துதலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**இடைமுகம்:**

ஒரு பொருள் செய்யக்கூடிய செயல்களின் தொகுப்பு இடைமுகம் ஆகும். ஆனால் அவற்றை உண்மையில் செய்யக் கூடியது இல்லை.

**செயல்படுத்துதல்:**

இடை முகத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கட்டளைகளை நிறைவேற்றுகிறது.

- ✓ பொருள் நோக்கு நிரலாக்க மொழியில் இனக்குழு என்பது இடைமுகம் மற்றும் செயல்படுத்துதல் என்பது பொருள் ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

காரின் வேகத்தை அதிகரித்தல்

- ❖ காரை ஓட்டும் நபர் அந்த காரின் உட்புறசெயல்பாடுகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.




- ❖ காரின் வேகத்தை அதிகப்படுத்த அவர் காரின் துரிதப்படுத்தியை அழுத்தி விரும்பிய பண்பை பெறுவார். இங்கு துரிதப்படுத்தி என்பது கார் ஓட்டுநருக்கும் (அழைக்கும் பொருள்) இயந்திரத்துக்கும் (அழைக்கப்படும் பொருள்) இடையேயான இடைமுகம் ஆகும்.
- ❖ உட்புறமாக, காரின்இயந்திரம் அனைத்து வேலைகளையும் செய்கிறது. எரிபொருள், காற்று, அழுத்தம் மற்றும் மின்சாரம் ஆகியவை இங்கு ஒன்றாக சேர்ந்து, ஆற்றலை உருவாக்கி, வாகனத்தை நகர்த்துகிறது.
- ❖ இந்த அனைத்து நடவடிக்கைகளும் கார் ஓட்டுநரிடம் இருந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனால், இடைமுகத்தை செயல்படுத்துதலில் இருந்து பிரித்து வைக்கப்படுகிறது.

**25. தரவு அருவமாக்கம் எவ்வாறு செயல்படுத்துவாய்? எடுத்துக்காட்டுடன்விளக்குக.**

தரவு அருவமாக்கினை செயல்படுத்த, ஆக்கிகள் மற்றும் செலக்டர் என்ற இரண்டு செயற்கூறுகள் உருவாக்கப்பட வேண்டும்.

- ❖ ஆக்கி செயற்கூறுகள் அருவமாக்கம் தரவு வகையை கட்டமைக்க பயன்படுகிறது.
- ❖ செலக்டர் செயற்கூறுகள் தகவல்களை தரவு வகையிலிருந்து பெறுவதற்கு பயன்படுகிறது.

எடுத்துக்காட்டாக,

city என்று ஒரு அருவமாக்க தரவுவகையை எடுத்துக்கொள்வோம். city என்ற பொருள் நகரத்தின் பெயர், அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை பற்றிய தகவல்களை சேமித்திருக்கும்.

city = makecity (name, lat, lon)

- ✓ இங்கு makecity(name, lat, lon) என்ற செயற்கூறு ஆக்கியாகும். இது city எனும் பொருளை உருவாக்கும் போது name, lat, lon ஆகிய மதிப்புகள் அளபுருவாக அனுப்பப்படுகிறது.
- ✓ getname(city), getlat(city) மற்றும் getlon(city) ஆகியன செலக்டார் செயற்கூறுகளாகும். இவை city எனும் பொருளிலிருந்து தகவல்களை பெற்றுத் தரும் செலக்டர் செயற்கூறுகளாகும்.

26.

**தொகுதி நிரலாக்கத்தின் பயன்களை எழுதுக?**

- குறைந்த வரிகளைக் கொண்ட குறிமுறையை எழுதினால் போதுமானது.
- மறுபயனாக்கத்திற்கும் பலமுறை குறிமுறை தட்டச்சு செய்வதை தவிர்ப்பதற்கு, ஒற்றை செயல்முறையை உருவாக்க வேண்டும்.
- நிரல்கள் மிக எளிதாக வடிவமைக்கப் படுகின்றன. ஏனெனில், முழு குறிமுறையும் சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு சிறிய குழுவினரால் கையாளப்படுகிறது.
- தொகுதி நிரலாக்கம் பல நிரலர்களை ஒரே பயன்பாட்டில் வேலை செய்ய அனுமதிக்கிறது.
- பல கோப்புகளில் இந்த குறிமுறை சேமிக்கப்படுகிறது.
- குறிமுறை சிறியதாக, எளியதாக, புரிந்து கொள்ளும் வகையில் உள்ளது.
- துணை நிரல்களாக அல்லது செயல்கூறுகளாக இருப்பதால் பிழைகளை எளிதாக கண்டு பிடிக்க இயலும்.
- ஒரே குறிமுறை பல பயன்பாடுகளில் பயன்படுத்தப்படலாம்.
- மாறிகளின் வரையெல்லையை எளிதில் கட்டுப்படுத்த முடியும்.

26.

**இயங்கு நிரலாக்கத்தின் கருத்துருவை ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டுடன் விளக்கவும்.**

- சிக்கலுக்கு தீர்வு காண வரிசையான முடிவுகளின் மூலம் செயல்படுத்தப்படும் நெறிமுறை வடிவம்.
- கொடுக்கப்பட்ட சிக்கலை, சிறிய சிக்கலாகப் பிரித்து, மேலும் அவற்றை சிறுசிறு சிக்கல்களாகப் பிரித்து செயல்படுத்தும்
- சிக்கல்களை ஒரே மாதிரியாகப் பிரிப்பதனால், அதன் மூலம் கிடைக்கும் தீர்வை மீண்டும் பயன்படுத்தலாம்.
- கையில் உள்ள துணைச் சிக்கலைத் தீர்ப்பதற்கு முன், இந்த செயல்முறையானது ஏற்கனவே தீர்வு காணப்பட்ட துணைச் சிக்கல்களின் முடிவுகளை ஆராய முயற்சிக்கும்.
- மிகச் சிறந்த தீர்வை அடைவதற்கு துணைச் சிக்கல்களின் தீர்வை ஒன்றிணைத்தல் வேண்டும்.
- இது பிரித்தல் மற்றும் கைப்பற்றுதல் முறைக்கு ஒப்பாகும்.

**இயங்கு நிரலாக்கத்தின் படிநிலைகள்:**

- ✓ சிக்கல்களை சிறிய ஒன்றோடு ஒன்றிணைந்த துணைச் சிக்கல்களாகப் பிரிக்க வேண்டும்.
- ✓ சிறிய துணைச்சிக்கல்களின் உகந்த தீர்வை பயன்படுத்தி, சிக்கலின் உகந்த தீர்வை அடைய வேண்டும்.
- ✓ நினைவிருத்தலை பயன்படுத்துகிறது.

**எ.கா: பைபோனாசி வரிசை**

பைபோனாசி வரிசை என்பது, முந்தைய இரண்டு எண்களைக் கூட்டி அடுத்தடுத்த எண்களை உருவாக்குவதாகும்.

பைபோனாசி வரிசைக்கு சுழற்சி நெறிமுறை:

**படிநிலை–1:** $f_0=0$, $f_1=1$ என தொடக்க மதிப்பிருத்தி, $f_0$ மற்றும் $f_1$-ஐ அச்சிடவும்.

**படிநிலை–2:** $fib = f_0 + f_1$ என கணக்கிட்டு, fib மதிப்பை அச்சிடவும்.

**படிநிலை–3:** $f_0 = f_1$ மற்றும் $f_1 = fib$ என்ற கூற்றுகளின் வாயிலாக மதிப்புகளை இடமாற்றம் செய்யவும்.

**படிநிலை–4:** குறிப்பிட்ட வரிசை உருவாகும் வரை படிநிலை-2யிலிருந்து திரும்பச் செய்யவும்.

உள்ளீடு n = 10 எனில், 0 1 1 2 3 5 8 13 21 34 55 என்ற பைபோனாசி வரிசை விடைக்கும்.

27.

**input() மற்றும் print() செயற்கூறுகள் பற்றி விளக்கு.**

**input() செயற்கூறு:**

input( ) செயற்கூறு நிரலை இயக்கும் போது தரவுகளை உள்ளீடாக பெற்றுக் கொள்ள பயன்படுகிறது.

**தொடரியல்:**

Variable = input("prompt string")

✓ "prompt string" பயனர் கொடுக்கப்பட வேண்டிய உள்ளீடு எதுவென்பதை உணர்த்தும்.

**எடுத்துக்காட்டு:**

```
>>>city=input("Enter your city:")
   Enter your city: Salem
```

✓ input() செயற்கூறு அனைத்து தரவுகளையும் சரங்கள் அல்லது குறியுருவாக ஏற்றுக் கொள்ளும், எண்களாக அல்ல. சரங்களை எண் வகையாக மாற்ற int() செயற்கூறு பயன்படுகிறது.

**எடுத்துக்காட்டு:**

```
x = int(input("Enter a number:"))
```

**print() செயுற்கூறு:**

print() செயுற்கூறு நிரலை இயக்கும் போது தரவுகளை வெளியிட பயன்படுகிறது.

**தொடரியல்:**

```
print("String")
print(variable)
print("string", variable)
print("string1", varl, "string2"', var2)
```

**எடுத்துக்காட்டு:**

```
(1) >>>print('Welcome')
     Welcome
(2) >>>x = 2
    >>>y = 3
    >>>print(" The sum of is ", x+y)
    The sum is 5
```

- ✓ print() செயற்கூறு தீர்வுகளை திரையில் காண்பிக்கும் முன் கோவையை மதிப்பீடு செய்யும்.
- ✓ காற்புள்ளி ( , ) கொண்டு print( ) செயற்கூறினுள் ஒன்றுக்கு மேற்பட்ட உருப்புகளை பிரிக்கலாம்.

27.

**இரண்டு எண்களின் LCM கண்டுபிடிப்பதற்கான பைத்தான் நிரலை எழுதுக.**

**நிரல்:**

```
a = int(input("Enter First Number :"))
b = int(input("Enter Second Number :"))
if a>b:
    min = a
else:
    min = b
while 1:
    if min % a ==0 and min % b ==0:
        print (min)
        break
    min = min + 1
```

**வெளியீடு:**

```
Enter First Number :5
Enter Second Number :3
15
```

M. RAJIVGANDHI M.Com., M.C.A.
COMPUTER INSTRUCTOR
Nadar Hr. sec. school
Rajapalayam
Cell: 9524756933
Mail: mrajivgandhibcomca@gmail.com

www.Padasalai.Net